**டிசம்பர் – 30**

# TNPSC துளிகள்


- ஜுகி ஜொப்ரி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக தில்லி அரசாங்கமானது 'முக்கிய மந்திரி ஆவாஸ் யோஜனா' என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
    - இந்தத் திட்டமானது தில்லியில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் சிறந்த வீட்டு வசதியை வழங்க இருக்கின்றது.
- சாராய் என்னும் வெப்ப மண்டலச் சூறாவளியானது பசிபிக் தீவு நாடான பிஜியைத் தாக்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இரட்டை அடுக்குகள் கொண்ட ரயில்

- இரட்டை அடுக்குகள் கொண்ட முதல் சரக்கு ரயிலின் சோதனை ஓட்டமானது மேற்கத்தியப் பிரத்தியேக சரக்குப் போக்குவரத்துப் பாதையில் நடத்தப் பட்டது.
- இந்த ரயிலானது இந்தியப் பிரத்தியேக சரக்குப் போக்குவரத்துக் கழக நிறுவனம் என்ற நிறுவனத்தினால் (Dedicated Freight Corporation India Limited - DFCIL) கொடியசைத்துத் துவக்கி வைக்கப் பட்டது.
- இந்த ரயிலானது ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள ரேவாரி - மடார் என்ற பிரிவில் இயக்கப்பட உள்ளது.
- DFCIL நிறுவனமானது தற்போது ஒரு மணி நேரத்திற்கு 75 கிலோமீட்டர் வேகத்தில் சரக்கு ரயில்களை இயக்குகின்றது.
- தற்போது இரட்டை அடுக்குகள் கொண்ட ரயில்களானவை சீனா, பிரேசில், ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவீடன் மற்றும் நார்வே போன்ற நாடுகளில் மட்டுமே இயக்கப் படுகின்றன.
- 1,504 கி.மீ. நீளமுள்ள மேற்குப் பெருவழிப் பாதையானது உத்தரப் பிரதேசத்தின் தாத்ரியில் தொடங்கி ஹரியானா, ராஜஸ்தான், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் வழியாக நாட்டின் மிகப்பெரிய சரக்குக் கொள்கலன் துறைமுகமான மும்பைக்கு அருகில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகப் பகுதியை இணைக்கின்றது.
- இதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனமானது நிதியுதவி அளிக்கின்றது.






## ஆதார் விவரங்கள் பதிவு செய்யும் பணி

❖ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள சிறப்புப் பயன்பாட்டுக் குழுவான இந்திய மின் ஆளுமை பொதுச் சேவை நிறுவனங்களானவை ஆதார் விவரங்களைப் பதிவு செய்யும் பணிகளை மீண்டும் தொடங்கியுள்ளன.

❖ ஆதார் அட்டையானது இப்போது முதன்மை அடையாள ஆவணமாக பயன்படுத்தப் படுகின்றது.

❖ சிறப்புப் பயன்பாட்டுக் குழுவான பொதுச் சேவை நிறுவனங்களானவை, தனித்துவமான அடையாள அட்டை வைத்திருப்பவர்களின் ஆதார் விவரங்களைப் பதிவு செய்தல், திருத்தங்கள் செய்தல் மற்றும் சுயவிவரத்தில் மாற்றங்கள் செய்தல் தொடர்பாக இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்துடன் (Unique Identification Authority of India - UIDAI) ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது.

## முதல் போக்குவரத்து சார்ந்த வளர்ச்சி (TOD)

❖ மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா புது தில்லியில் நாட்டின் முதல் போக்குவரத்து சார்ந்த வளர்ச்சி திட்டத்திற்கு (Transit-Oriented Development - TOD) அடிக்கல் நாட்டி உள்ளார்.

❖ TOD திட்டத்தின் கீழ் கிழக்கு தில்லியில் தேசிய தலைநகரின் மிக உயரமான கோபுரம் உட்பட அதிநவீன உள்கட்டமைப்பு மண்டலம் ஒன்று கட்டப்பட உள்ளது.

❖ இத்திட்டத்தினை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகமானது செயல்படுத்த இருக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## 19வது கூட்டு ஆணையக் கூட்டம் - 2019

- ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான 19வது கூட்டு ஆணையக் கூட்டத்திற்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தலைமை தாங்கினார்.
- நட்புக்கான இருதரப்பு ஒப்பந்தத்தின் 70வது ஆண்டு விழாவை 2020 ஆம் ஆண்டில் கொண்டாடுவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

## இணையவழிக் குற்றம் தொடர்பான ஐ.நா.வின் புதிய சர்வதேச ஒப்பந்தம்

- ஐக்கிய நாடுகள் சபையானது இணையவழிக் குற்றங்கள் தொடர்பாக ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்குவதற்காக ஒரு புதிய தீர்மானத்தை நிறைவேற்றிட ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் தீர்மானமானது ரஷ்யாவால் தயாரிக்கப்பட்டு ஐ.நா அமைப்பின் 193 உறுப்பு நாடுகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இணையம் மற்றும் கணினி வழியாக நடைபெறும் குற்றங்களை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் அமைந்த இணையவழிக் குற்றம் தொடர்பான முதல் ஒப்பந்தமாக புடாபெஸ்ட் ஒப்பந்தம் இருந்தது.
- இந்தத் தீர்மானமானது ஐரோப்பிய ஒன்றியக் குழுவால் உருவாக்கப்பட்டது.
- தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் உள்ள இணையவழிக் குற்றம் தொடர்பான ஒரே ஒப்பந்தம் இதுவேயாகும்.
- இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் இதுவரை இந்த ஒப்பந்தத்தை ஏற்க வில்லை.

## ஐ.நா. அமைப்பின் நிதிநிலை அதிகரிப்பு

- ஐக்கிய நாடுகள் சபையானது 3.07 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள நிதிநிலையை 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதியன்று ஏற்றுக் கொண்டது.
- இந்த அமைப்பு முதன்முறையாக மியான்மர் மற்றும் சிரியாவில் நடந்த போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணையையும் அதன் நிதி ஒதுக்கீட்டில் உள்ளடக்கியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான ஐ.நா. நிதி ஒதுக்கீட்டுத் திட்டமானது 2019 ஆம் ஆண்டை விட சற்றே அதிகமாக உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் ஐ.நா. நிதி ஒதுக்கீட்டுத் திட்டமானது 2.9 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையானது கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய நிதி நிலைத்தன்மை அறிக்கை

- ரிசர்வ் வங்கியானது நிதி நிலைத்தன்மை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது ஒரு வருடத்திற்கு இருமுறை வெளியிடப் படுகின்றது.

- இந்த அறிக்கையானது வங்கிகளின் வாராக் கடன் விகிதம் அதிகரித்து வருவதாக கூறியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் 9.3 சதவீதமாக இருந்த இந்த விகிதமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் 9.9 சதவீதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஜெரானியம் மரக்கன்றுகள்

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி ஆணையமானது (Council of Scientific and Industrial Research - CSIR) ஜெரானியம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய புதிய மற்றும் குறைந்த செலவிலான ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- தற்போது காற்றோட்டமான கண்ணாடி அமைப்பில் ஜெரானியம் சாகுபடி செய்யப் படுகின்றது.
- புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன், மற்ற பயிர்களைப் போலவே பண்ணை போன்ற இடங்களிலும் இந்த ஜெரானியத்தினைப் பயிரிட முடியும்.
- ஜெரானியம் ஒரு அழற்சி எதிர்ப்பு மற்றும் நோய்த்தொற்று எதிர்ப்புப் பொருளாகச் செயல்படுகின்றது.
- ஜெரானியம் தாவரமானது முதன் முதலில் தென்னாப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்டது. இது முக்கியமாக அத்தியாவசிய எண்ணெய்ப் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுகின்றது.
- நவம்பர் மாதமானது ஜெரானியத்திற்கான சிறந்த விதைப்புப் பருவமாகும்.
- இந்த தாவரமானது இந்தியாவில் இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் வடகிழக்குப் பிராந்தியங்களில் பயிரிடப்படுகின்றது.
- இது பல மருத்துவ மதிப்புகளைக் கொண்டுள்ளது.
- நறுமணப் பயிர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்களின் சாகுபடியை அதிகரிப்பதற்காகத் தொடங்கப்பட்ட அரோமா திட்டத்தின் கீழ் இது சாகுபடி செய்யப் படுகின்றது.
- இந்தத் திட்டத்தில் ரோஸ்மேரி, லாவெண்டர் மற்றும் எலுமிச்சைப் புல் ஆகிய சாகுபடிப் பயிர்களும் அடங்கும்.
- இந்தத் திட்டமானது இத்தகுப் பயிர்களை பயிரிடப்படாத மற்றும் தரிசு நிலங்களில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கின்றது.
- வறட்சி, உப்புத்தன்மை, நீர்ப் பற்றாக்குறை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களும் இந்தத் திட்டத்தில் உள்ளன.



# சுற்றுச்சூழல் செய்திகள்


## ஸ்னோஎக்ஸ் வான்வழிப் பிரச்சாரம்

- 2016-17 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஸ்னோஎக்ஸ் என்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக நாசா அமைப்பானது ஒரு பருவ காலப் பிரச்சாரத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- நாசா அமைப்பின் ஒட்டு மொத்த இலக்கானது தொலையுணர்வி மற்றும் மாதிரிகளின் உதவிகளைக் கொண்டு உலகளாவிய “பனிக்கட்டி மற்றும் நீரின் சமநிலை” (Snow Water Equivalent - SWE) குறித்த வரைபடத்தினை உருவாக்குவதற்குத் தகுந்த உத்திகளை அளிப்பதாகும்.
- தட்டையானப் பனிப் பிரதேசங்கள் மற்றும் காடுகளை உள்ளடக்கியுள்ள “ஸ்னோஎக்ஸ் 2020” என்ற இந்தப் பிரச்சாரமானது முதலாவதாக அமெரிக்காவின் கொலராடோ எனும் மாகாணத்தில் உள்ள கிராண்ட் மெசா என்னும் இடத்திற்கு அருகே உள்ள கருவிகளை சோதனை செய்ய உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தென்னிந்தியாவின் பழமையான சமஸகிருதக் கல்வெட்டு

- இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தின் கல்வெட்டியல் துறையானது தென்னிந்தியாவின் மிகப் பழமையான சமஸ்கிருத கல்வெட்டைக் கண்டுபிடித்து உள்ளது.
- இந்தக் கள ஆய்வானது ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் உள்ள செப்ரோலு என்ற கிராமத்தில் செய்யப் பட்டது.
- கி.மு 207 ஆம் ஆண்டில் விஜயன் என்னும் சாதவாகன மன்னனால் வழங்கப்பட்ட இந்த கல்வெட்டில் சமஸ்கிருதம் மற்றும் பிராமி எழுத்துக்கள் உள்ளன.
- இதுவரை கி. பி 4 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட இக்ஷ்வாகு மன்னர் எஹவால சாந்தமுலாவின் நாகார்ஜுன கொண்டா கல்வெட்டானது தென்னிந்தியாவின் மிகப் பழமையான சமஸ்கிருதக் கல்வெட்டாக கருதப்பட்டது.
- இந்தக் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பானது ‘சப்தமாத்ரிகா’ என்ற வழிபாடு இருந்ததற்கான ஒரு பழமையான கல்வெட்டுச் சான்றாகக் கருதப் படுகின்றது.
- சப்தமாத்ரிகா என்பது இந்து மதத்தில் வணங்கப்படும் ஏழு பெண் தெய்வங்களின் குழுவாகும்.



### புதிய மின்னணு முறையிலான முன்னெடுப்புகள் - ஹரியானா

- ஹரியானா மாநில முதல்வர் மனோகர் லால் கட்டர் தேசிய நல்லாட்சி தினத்தை முன்னிட்டு புதிய மின்னணு முறையிலான 5 முன்னெடுப்புகளைத் தொடங்கி வைத்தார்.
- 2020 ஆம் ஆண்டானது "சுசாஷன் சங்கல்ப் வர்ஷ்" என்று அனுசரிக்கப்பட உள்ளது. இந்தத் திட்டங்களுக்கான சீர்திருத்தங்கள் அந்த மாநில மக்களிடமிருந்துப் பெறப்பட இருக்கின்றன.
- கிராமப்புற மற்றும் வாழ்விடப் பகுதிகளில் 'சிர்சி கிராமம்' என்ற சோதனை அடிப்படையிலான திட்டம் நிறைவடைந்து உள்ளதுடன், சிர்சி பணிகளின் கள சரிபார்ப்பும் செய்யப் பட்டுள்ளது. இதனால் இந்தக் கிராமமானது மாநிலத்தின் முதல் "விவசாய நிலமல்லாத வாழ்விடப் பகுதிகளைக் கொண்ட" கிராமமாக உருவெடுத்து உள்ளது.
- சரல் வலைதளத்தில் கூடுதலாக தற்போது 42 சேவைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கூடுதல் சேவைகளுடன், இந்த வலைதளத்தில் உள்ள மொத்த சேவைகளின் எண்ணிக்கையானது தற்போது 527ஐ எட்டியுள்ளது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ஹரிவராசனம் விருது

- 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க ஹரிவராசனம் விருதுக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த இசைக் கலைஞரான இளையராஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்த விருதானது கேரள மாநில அரசால் நிறுவப் பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் சபரிமலையில் நடைபெறும் மகர விளக்கு விழாவிற்கு முன்னதாக ஹரிவராசனம் விருது அறிவிக்கப் படுகின்றது.

*விருது பற்றி*

- இந்த விருது கேரள மாநில அரசு மற்றும் திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியம் ஆகியவற்றால் இணைந்து நிறுவப் பட்டது. மேலும் இது 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகின்றது.
- முதன் முதலாக 2012 ஆம் ஆண்டில் இந்த விருதைப் பெற்றவர் கே.ஜே.யேசுதாஸ் ஆவார். கடந்த ஆண்டு பாடகர் பி சுசீலாவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- மதச்சார்பின்மை மற்றும் உலகளாவிய சகோதரத்துவ உணர்வை இசை மூலம் பரப்புவதற்குப் பங்களித்த நபர்களுக்கு இந்த விருது வழங்கப் படுகின்றது.


## இதரச் செய்திகள்

### என் உள்ளங்கையில் உள்ள வைரம் – புத்தகம்

- சஞ்சய் தர்வாட்கர் "டயமண்ட் இன் மை பாம்" (என் உள்ளங்கையில் உள்ள வைரம்) என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகமானது உலகின் மிகப்பெரிய 12 வைரங்கள் ஆந்திராவின் கோல்கொண்டா மற்றும் கொல்லூர் சுரங்கங்களில் இருந்து எவ்வாறு உருவானது என்பதையும் பின்னர் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எவ்வாறு அவை முகலாயர்கள்,

பாரசீகர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், துருக்கியர்கள் மற்றும் ரஷ்யர்கள் ஆகியோரால் எடுத்துச் செல்லப்பட்டு அவர்களின் தேசியப் பொக்கிஷங்களில் ஒன்றாக இப்போது அவை விளங்குவதைப் பற்றியும் விவரிக்கின்றது.

- இந்தப் புத்தகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள முக்கியமான வைரங்கள்
  - கோஹினூர் (இப்போது லண்டனில் உள்ளது),
  - இளஞ்சிவப்பு நிற தர்யா-இ-நூர் (இப்போது டெஹ்ரானில் உள்ளது),
  - வெளிர் நிற, தட்டையான வடிவமுடைய ஷா வைரம் மற்றும் அரை முட்டை கண் வடிவ, நீல-பச்சை நிற ஆர்லோவ் வைரம் (இரண்டும் இப்போது கிரெம்ளினில் உள்ளது),
  - ஹோப் வைரம் எனப்படும் நீல நிற வைரம் (இப்போது ஸ்மித்சோனியனில் உள்ளது).




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★